# <u>ஸ்ரீ மஹாவீர வைபவம்</u>

## <u>ஸ்ரீ ரகுவீர கத்யம்</u>

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

<u>ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ மஹாவீர வைபவம்</u>



**ஸ்லோகம் - (25)**

பரதன் சித்ரகூடத்திற்கு உன்னைத் தேடி வந்து, அயோத்திக்கு வந்து ராஜ்ஜியத்தை ஏற்குமாறு உன்னிடம் வேண்டினான். தந்தையின் சொல்லைக் காப்பதில் உறுதியுடன் இருந்ததனால், நீ அயோத்திக்கு திரும்ப மறுத்தாய். பின் உன்னைச் சரணமடைந்தான். அதனால் மனமிரங்கிய நீ, உன் சிறந்த பாதுகைகளை அவன் திருமுடியில் எழுந்தருளச் செய்தாய். அவன் அந்த பாதுகைகளுக்கு முடி சூட்டினான். நீ காட்டிலிருந்து திரும்பும் வரை அந்த பாதுகைகளையே சக்கரவர்த்தியாகக் கொண்டு, தான் அவற்றின் பணியாளனாக இருந்து, நாட்டிற்கு நன்மை பயந்தான். இப்படிச் செய்வித்து அனைத்து உலகங்களுக்கும் யோக க்ஷேமங்களை நன்கு நடத்தி வைத்தாய்.

**ஸ்லோகம் - (26)**

இந்திரனின் மைந்தனான காகன், மாம்ஸத்தில் ஆசைகொண்டு, சீதாப்பிராட்டியிடம் பெரிய அபசாரத்தைச் செய்தான். அதனால் கோபம் கொண்ட நீ, உனது தர்ப்பாஸனத்திலிருந்து ஒரு சிறு துரும்பை எடுத்துப் பிரம்மாஸ்த்திரமாக அந்த காகன் மீது எய்தாய். அது அஞ்சி ஓடுகின்ற அவனை மிக்க பரபரப்புடன் துரத்தியது. அதன் வேகத்தைக் கண்ட தேவர்களும் முனிவர்களும், அந்த காகனுக்கு உதவி புரிந்தால், அந்த அஸ்த்திரம் தங்கள் மீது பாயுமோ என்று அஞ்சி நின்றனர். அவர்கள் அனைவரும் ஒரு சிறு துரும்பு பிரம்மாஸ்த்திரமாக வடிவுகொண்டு அற்புதச் செயல்கள் நிகழ்த்துவதை மிக மிகக் கொண்டாடினார்கள்.




**ஸ்லோகம் - (27)**

இந்திரனின் மைந்தனான அந்தக் காகன் தன்னை பிரம்மாஸ்த்திரம் துரத்தும்போது, பிரம்மன் - ருத்ரன் - இந்திரன் ஆகிய பெரிய தேவர்கள் தன்னைக் காப்பாற்றுவார்களோ என்று எண்ணி அவர்களை அணுகினான். அவர்களோ அந்தக் காகனை காப்பாற்ற இயலாத நிலையில் இருந்தனர். அவனைக் காக்க முயன்றால் தங்களுக்கு என்ன தீங்கு வருமோ என்று அஞ்சி இருந்தனர். நீ விடுத்த சிறு துரும்பின் பெருமை அத்தகையது


श्रीमते निगमान्त महा देशिकाय नमः ।
श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किक केसरी ।
वेदान्ताचार्य वर्यो मे सन्निधत्ताम् सदाहृदि ॥
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஶிகாய நம: ।
ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ॥
श्री महावीर वैभवम्
ஸ்ரீ மஹாவீர வைபவம்
(27)
द्रुहिण हर वलमथन दुरारक्ष शर लक्ष!
த்ருஹிண ஹர வலமதந துராரக்ஷ ஶர லக்ஷ!


श्रीमते निगमान्त महा देशिकाय नमः ।
श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किक केसरी ।
वेदान्ताचार्य वर्यो मे सन्निधत्ताम् सदाहृदि ॥
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஶிகாய நம: ।
ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ॥
श्री महावीर वैभवम्
ஸ்ரீ மஹாவீர வைபவம்
(28)
दण्डका तपोवन जङ्गम पारिजात!
தண்டகா தபோவந ஜங்கம பாரிஜாத!

**ஸ்லோகம் - (28)**

நீ தண்டகாரண்யத்திற்கு எழுந்தருளினாய். அங்கு கடும் தவம் புரிந்துகொண்டிருந்த முனிவர்கள், உன் வருகையைக் கண்டு, தாங்கள் அரக்கர்களால் நலிவுபடுவதைக் கூறி, தங்கள் சரீரத்தைக் காட்டினார்கள். அவர்களின் குறையைக் கேட்டுத் துன்பத்தைப் போக்கி, அவரவர் விருப்பத்தை நிறைவேற்றினாய். அந்தக் கானகத்தில் நீ அங்கும் இங்கும் உலாவிக் கொண்டேயிருந்து அவரவர்க்கு நன்மை செய்ததை நோக்கும்போது, பாரிஜாதமரமே இங்கு வந்து நடையாடுகின்றதோ என்று கூறும்படியாக நின்றாய்.

**தொடரும்...**

